இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்- மட்டம் 3

இறுதிப் பரீட்சை - **2023/2024**

**LLU 3406** – நியதிச் சட்டங்களைப் பொருள்கோடல் செய்தல்

காலம்: மூன்று மணித்தியாலங்கள்

**திகதி: 18th மே 2025** **நேரம்**: 01.30 - 04.30pm

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு** (08)

ஏதேனும் ஐந்து (05) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்குக.

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1) பேர்ல் தீவின் 2008 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் இவ்வாறு கூறுகின்றது.

பிரிவு 1: பொது மக்களுக்கு அணுகல் உள்ள இடத்தில் எவற்றையாவது வீசும், இடும் அல்லது பதுக்கும் வகையில் சுற்றுச்சூழலைக் குப்பையாக்கும் எவரும் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவர்.

பேர்ல் தீவின் தேசிய கலைப்பள்ளியின் ஆசிரியையான ஷ்யாமா ஒரு மூடக்கூடிய கூரையுள்ள காரை உடையவள். அந்தக் காரின் கூரைத் திறந்த நிலையில் பயணித்துக் கொண்டிருந்தபோது, மாணவர்களின் மாதிரி பரீட்சை விடைகளின் சில பக்கங்கள் காற்றில் பறந்து காரிலிருந்து வெளியே சென்றன. ஷ்யாமா தனது காரை நிறுத்தி, வழியிலிருந்த முடிந்தளவிலான பக்கங்களை மீட்டெடுத்தாள். எனினும், மற்ற சில பக்கங்கள் அருகிலிருந்த முள்ளுள்ள கொடிகள் நிறைந்த காடுக்குள் பறந்துவிட்டன. ஷ்யாமா மேற்படி சட்டத்தின் பிரிவு 1ன் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஷ்யாமா, 2008 ஆம் ஆண்டின் தேசிய சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றம் நிகழ்ந்ததா என்பதற்கான ஆலோசனையை உங்களிடம் கோருகிறார்.

பொருட்கோடலை அடிப்படையாகக் கொண்டு ஷ்யாமாவுக்கு ஆலோசனை வழங்குங்கள்.

(20 புள்ளிகள்)

2. “பொருட்கோடல் என்பது, சட்டமன்றம் போன்ற சட்டம் இயற்றும் அமைப்பின் உண்மை மற்றும் சரியான நோக்கத்தைத் தீர்மானிக்கும் செயல்முறையாகும். அந்த நோக்கங்கள் சட்டங்களாக எழுதப்பட்டிருக்கின்றன.”
**Von Glasersfeld, E. (1983) On the concept of interpretation. Poetics, 12(2-3), 207-218**

மேற்கண்ட மேற்கோளின் அடிப்படையில், சட்ட பொருட்கோடல் மற்றும் சட்டமன்றத்தின் நோக்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்க.

தகுந்த எடுத்துக்காட்டுகள் மற்றும் வழக்கு உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

3. . 2 ஆம் இலக்க 1985 ஆம் ஆண்டின் செலோனிக்காவின் ஆபத்தான ஆயுதங்கள் சட்டம் பின்வரும் விதிமுறையைக் கொண்டுள்ளது.

பிரிவு 3: பொது வணிக வளாகங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில், எந்த நபரும் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதியில்லை. பிரிவு 3-இன் மீறலானது, இந்தச் சட்டத்தின் பிரிவு 5-இல் விவரிக்கப்பட்ட குற்றமாகக் கருதப்படும்.

இந்தச் சட்டத்திற்கான பாயிரத்தில், இந்தச் சட்டத்தின் நோக்கம் என்பது, ஆபத்தான ஆயுதங்களை வைத்திருத்தல், பெற்றல், இடமாற்றம் செய்தல், பயன்படுத்தல் அல்லது விநியோகித்தல் மற்றும் இதனுடன் தொடர்புடைய சில மற்ற செயல்களை ஒழுங்குபடுத்துவதாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்கி, ஒரு கைவினை நிபுணன் (craftsman), டன்லொக் நகர வணிக வளாகம் இல் வருடாந்த விழா நடைபெறும் கண்காட்சிக்கு நுழையும் போது, காகித வெட்டிக் கருவி மற்றும் பிளேடுடன் வருகின்றான். அந்த வணிக வளாகத்தின் பாதுகாப்பு அதிகாரிகள், முன் அறிவிப்பு இல்லாமல் ஆயுதங்களை கொண்டு வருவது குற்றமாகும் எனக் கூறுகின்றனர். ஆனால் விக்கி, இந்தக் கருவிகள் தாக்குதலுக்காக அல்ல, தனது வேலைக்கான கருவிகள் மட்டுமே என வாதிடுகிறார்.

நீங்கள் இந்த வழக்கில் நீதிபதியாக இருப்பதாகக் கருதுங்கள். இந்த வழக்கில், 2 ஆம் இலக்க 1985 ஆம் ஆண்டின் செலோனிக்காவின் ஆபத்தான ஆயுதங்கள் சட்டத்தை நீங்கள் எவ்வாறு பொருட் கோடல் செய்வீர்கள்?

சட்டப் பொருட்கோடலுக்கான பல்வேறு அணுகுமுறைகள் மற்றும் வழக்குச் சட்டங்களை (case law) பயன்படுத்தி உங்கள் பதிலை விளக்குக.

(20 புள்ளிகள்)

4) a). அவ்வினத்த (Ejusdem generis) மற்றும் சொல்லின் பொருள் அதன் (Noscitur a sociis) என்ற இரண்டும் ஒரே , ஆனால் அவற்றிற்கிடையில் சிறு வேறுபாடு உள்ளது. விளக்குக.

(10 புள்ளிகள்)

b). ஒரு நியதிச் சட்டம் (statute) "மே 2025 முதல் வரி (tax) செலுத்தப்பட வேண்டிய கார்கள், பாரவண்டிகள் மற்றும் பிற மோட்டார் சக்தியால் இயக்கப்படும் வாகனங்களை" குறிக்கிறது. மிதிவண்டி வைத்திருக்கும் அருண், வரிக்கு உட்பட்டவரா? விளக்குக.

(05 புள்ளிகள்)

c). நகராட்சி கட்டளைச் சட்டம் (City Ordinance) நகர் எல்லைகளுக்குள் நாய்கள், பூனைகள், குரங்குகள் மற்றும் பிற விலைகளுக்கு உணவு கொடுத்தல் (feeding) தடை செய்யப்பட்டுள்ளது. டினா காகங்களுக்கு உணவு கொடுக்கிறார். விளக்குக
(10 புள்ளிகள்)

(05 புள்ளிகள்)

5. "அரசியலமைப்பு என்பது நாட்டின் உயர் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது, மேலும் பொதுச் சட்டங்கள் அரசியலமைப்பிலிருந்து வலிதாக்கம் பெறுகின்றன. வழக்கமான சட்டத்தின் பிரிவுகளை விளக்குவதற்கான ஒரு தீபமாக அரசியலமைப்பை பயன்படுத்த வேண்டும்."

Per Justice Eva Wanasundara in AG v Ambagala Mudiyanselage Samantha Sampath [SC Appeal No. 17/2013] p8

a). மேற்கூறப்பட்ட கூற்றின் அடிப்படையில், அரசியலமைப்புப் பொருட்கோடலில் இலங்கை நீதித்துறையின் பங்கை மதிப்பீடு செய்க.

உங்கள் விடையை தொடர்புடைய வழக்குச் சட்டத்தின் தொடர்புபடுத்தி ஆராய்க.
**(12 புள்ளிகள்)**

b). இலங்கை நீதித்துறையின் அணுகுமுறையை, நீங்கள் விரும்பும் மற்றொரு நாட்டு நீதித்துறையின் அணுகுமுறையுடன் ஒப்பிடுக.

(8 புள்ளிகள்)

6. டைமண்ட் தீவின் மத்திய அரசு, தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் 50% இருக்கைகளை குடியிருப்பாளர்களுக்காக ஒதுக்க முடிவு செய்துள்ளது.

மத்திய அரசு கல்வி ஆட்சி சட்டத்தின் பிரிவு 8 இல், "மத்திய அரசில் 5 ஆண்டுகள் வாழ்ந்த ஒவ்வொரு நபரும் குடியிருப்பாளராக கருதப்படுவார்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

மாரி, அவ் அரசின் வியாபாரியாக இருப்பவர், ஒவ்வொரு ஆண்டும் மூன்று மாதங்கள் மட்டுமே அந்த அரசில் வசித்து வருகிறார். இந்த முறையில் அவர் கடந்த 7 ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். மேலும் கல்வியைத் தொடரும் நோக்கத்தில், மாரி மத்திய அரசிடம் குடியிருப்பாளராக அங்கீகரிக்க கோரி விண்ணப்பித்தார். ஆனால், தொடர்ச்சியான 5 ஆண்டு குடியிருப்பு என்ற அளவுகோலை அவர் பூர்த்தி செய்யவில்லை என்ற காரணத்தால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இச்சட்டத்தின் பாயிரம் பின்வருமாறு கூறுகிறது:
"மாநில குடியிருப்பாளர்களுக்கு வசதிகள், பாதுகாப்பு மற்றும் விசுவாசத்தை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் இந்தச் சட்டம் இயற்றப்படுகிறது."

தேவையான சட்டப் பொருட்கோடல் மற்றும் தொடர்புடைய வழக்குச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாரிக்கு ஆலோசனை வழங்குக.

(20 **புள்ளிகள்**)

7. "ஊகங்கள் என்பது சில சூழ்நிலைகள் முன்னரே தீர்மானிக்கப்பட்ட வகையில் எவ்வித வெளிப்பாடும் வந்தாலும், அது எதிர்மறையான சான்றுகள் வழங்கப்படும் வரை, நீதிமன்றம் ஏற்றுக் கொள்கின்ற வழிமுறைகளைக் குறிக்கின்றன."

மேற்கண்ட அறிக்கையுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா?

நீதிமன்ற விசாரணைகளின் போது, ஊகங்கள் எவ்வாறு தனிநபர்களின் உரிமைகளை பாதுகாக்க பயன்படுகின்றன என்பதை விவாதிக்க. உங்கள் விடையில் குறைந்தது **இரண்டு ஊகங்கள்** மற்றும் தொடர்புடைய வழக்கு உதாரணங்கள் மூலம் விளக்குக.

(20 **புள்ளிகள்**)

8. பின்வருவனவற்றின் எவையேனும் **இரண்டின்** மீது சிறு குறிப்புக்கள் வரைக.

a).சட்ட பொருள்கோடலில் அகராதிகள், பாடநூல்கள் மற்றும் இலக்கிய ஆதாரங்களின் உதவி

b). வெவ்வேறு அணுகுமுறைகளின் அரசியலமைப்பின் பொருட் கோடல்.

c). Peoples Bank v Rosy Jayasooriya [SC Appeal 156/2010]

d). சர்வதேசப் பொருத்தணைகளது பொருள்கோடல்

(10**×2** = 20 **புள்ளிகள்**)

****All rights reserved****